# குடும்ப சேவை, பொது சேவை, இறை சேவை

சேவை என்பது செயல். மனிதன் தனக்காக செயல்படுவதற்குப் பதிலாக பிறருக்காகச் செயல் படும்பொழுது செயல் சேவையாகிறது. பரநலம் செயலை சேவையாக மாற்றுகிறது. பிறர் நலம் பரந்து விரிந்து பரநிலையை (Supreme) எட்டினால் அது பரநலமாகிறது, நலம் விளைவிப்பது சேவை எனும் செயல். உடலசைவால் ஏற்படும் ஜடமான பலன் செயல், அறிவு எண்ணத்தால் உடலை அசைத்துச் செயல்படச் செய்கிறது. மனத்தில் எழும் அறிவு உடலின் அசைவால் எழுவதால் எது ஆரம்பம் மனமா, உடலா என்பது கேள்வி. மனம் ஐக்கியத்தைப் பிரிவினையால் வெளிப்படுத்துவது உடலில் பூர்த்தியாகிறது. ஐக்கியம் பிரிவினையால் உயர்ந்த ஐக்கியத்தை எழுப்புவது சிருஷ்டி. இதுவே சிருஷ்டியானால், குடும்பமும், பொது வாழ்வும், இறைவன் என்ற இயற்கை – இறைவன் என்ற அமைப்பு செயலை பரநலத்தால் சேவையாக்கி (Bliss) ஆனந்தத்தைப் (Delight) பேரானந்தமாக்குவது சிருஷ்டியின் நோக்கம். காரணம் இலட்சியம். காப்பித்தூளும் பாலும் சர்க்கரையுடன் கலந்த காபி தருவது Bliss ஆனந்தம். அவை கலக்குமுன் குடிப்பவர் மகிழ கலப்பது delight பேரானந்தம். மரபு ஆனந்தம் நாடுகிறது. ஸ்ரீ அரவிந்தம் ஆனந்தத்தைப் பரநலத்தால் பேரானந்தமாக்குகிறது. அதன் அடிக்கல் குடும்பம், கட்டடம் பொது வாழ்வு, மாளிகை இறைசேவை. ஆனந்தத்தை நாடும் இயற்கையான மனிதன் பேரானந்தத்தை உற்பத்தி செய்யும் இறைவனான மனிதனாவது ஸ்ரீ அரவிந்தம், குடும்ப மூலமும், ஊர் வழியாகவும், சிருஷ்டியிலும் சேவையாக செயல்படும் மனிதன் ஆன்மாவைப் பரிணாமத்தால் ஆனந்தமயமான ஜடமாக்க வல்லவன். அதன் அடிக்கல் நல்லெண்ணம். நல்லெண்ணம் மனிதனை வாழ்வில் தெய்வமாக்கும். அகந்தையுள் உள்ள ஆத்மாவை self சைத்திய புருஷனான ஈஸ்வரனாக்கும் மாற்றம் உலக வாழ்வு. அதன் 3 அம்சங்கள் தலைப்பு கூறுவது. விலங்குக்கு குடும்பமில்லை, தேள் குட்டி போட்டால் குட்டி அதே நிமிஷம் விலகும், தனித்து இயங்கும். மாடு கன்று போட்டால் 10 மாதம் பாலூட்டி வளர்க்கும். மனிதனுக்கு பிள்ளை பிறந்தால் 5 அல்லது 6 வயது வரை தாய் தந்தை காப்பாற்றுவர். குடும்பம் கூட்டுக்குடும்பமான பின் 5 அல்து 6 வயது 20 அல்லது 30 வயதாயிற்று. வயது 60 ஆனாலும் குடும்பம் பிரியாமலிருப்பது பெருமை பண்பு என்று கருத பல்லாயிரம் ஆண்டிற்கு முன் மனித மனம் பண்படைந்தது. குடும்பம் விரிந்து 'ஊரே' குடும்பம் என்ற இலட்சியமும் ஏற்பட்டது. சிருஷ்டி அனைத்தும் குடும்பம் என மனிதன் அறிய அவன் தன்னை இறைவனாக சித்திக்க வேண்டும். உபநிஷதம் மனிதனே இறைவன் எனக் கூறுகிறது. அகந்தை அந்நிலையிலும் பின் தொடர்வதால், ஆத்மா அகந்தையின் பின்னல் பிரியாததால் தத்துவம் அந்நிலையில் தேக்கமடைந்தது. தேக்கத்தை முறியடித்து அகந்தை அழியும் வழியை வகுத்து மனிதன் தானே இறைவன், இறைவனே ஜீவியம் – சிவன், காளி – என்பது சித்திப்பது ஸ்ரீ அரவிந்தம். வாழ்வைத் துறக்கும் மரபு வாழ்வனைத்தும் யோகம் என்ற ஸ்ரீ அரவிந்தமாவது ஆன்மீகப் பரிணாமத்தின் முதற்கட்டம். தலைப்பு முதற்கட்டம் முழுமை பெறும் பாதையை வகுக்கின்றது. சக்திக்கு ஜீவன் உண்டு என்பது அடுத்த சித்தி. ஆனந்தம் சச்சிதானந்தத்தை விட்டகன்று ஜடமான பொருள்களில் நிலையான பேரானந்தமானது சிருஷ்டி. இது சிருஷ்டியின் முழுமை. சிருஷ்டியின் முழுமை 'சிதறி' உலகமாகி ஆனந்தமான முழுமை அணுவான முழுமையாவது தெய்வீக மாயையில் சிருஷ்டிக்கும் செயல். இதன் கருவி சத்திய ஜீவியம். அது Real-Idea முழுமையான ஜீவனுள்ள எண்ணத்தால் இதைப் பூர்த்தி செய்ய தனக்கு உபகருவியாக மனத்தையும் அதன் செயல் பரிமளிக்க வாழ்வையும் அடிப்படையான ஜடத்தையும் சிருஷ்டிக்க பொருளைப் பல நிலைகளில் உற்பத்தி செய்து பிரபஞ்சத்தை நிரப்புகிறது. மென்மையும் மிருதுவான பொருள் கனத்த முரடான பொருள் வரை பரவுவதை 7 அல்லது 8 நிலைகளாகக் கூறியது தத்துவம். ஒவ்வொரு க்ஷணமும் சிருஷ்டி பரிணாமம் அடுத்தடுத்து நிகழ்வது காலம். அதைக் கடந்து அதனுடன் இணைந்து மூன்றாம் நிலைக்காலமான சத்திய ஜீவிய உலகை நிரந்தரமாக சிருஷ்டிப்பது சிருஷ்டியான ஆன்மீகப் பரிணாமம். இது செயல்படும் அமைப்பு அஞ்ஞானம் ஞானமாவது. உலகம்

உற்பத்தியாவதை பிரம்மம் நிர்ணயிப்பது மனிதனே மேற்கொண்டு காலத்தை விரிவுபடுத்தி புது உலகம் சிருஷ்டித்து, ஜீவாத்மாவை பரிணாமத்தால் பரமாத்மாவாக்கி, உலக முழுவதும் இறைவனின் திருவிளையாடலான லீலை என அறிய 4 வகை ஞானம் 7 வகை அஞ்ஞானத்தைக் கடந்து தீமையை அழிக்கிறது. மேல் மன அகந்தையால் சூழப்பட்ட ஆத்மா Self ஈஸ்வரன் பகுதியான வளரும் ஆன்மாவான சைத்திய புருஷனாகி இறைவன் திருவுள்ளம் முதற்கட்டத்தில் பூர்த்தியாகிறது. இரண்டாம் கட்டத்தில் ஆன்மா தெய்வீக ஆன்மாவாகி, அக்ஷர பிரம்மம் முழுப் பிரம்மமாக சித்தித்து வாழ்வை ஏற்று, பாதாளத்தையும் பரமாத்மாவையும் இணைத்து தீமையை அழித்து பரிணாமத்தால் தெய்வீக ஆன்மா பரநிலையை எய்தி ஜட உலகில் மனிதனாக அவதரித்து பிரபஞ்ச மனிதனாகி 3 திருவுருமாற்றதால் சத்திய ஜீவிய உலகை எட்டி சத்திய ஜீவனாகி, வாழ்வை அவன் வாழ்வான தெய்வீக வாழ்வாக்குவது ஆன்மீகப் பரிணாமமான ஸ்ரீ அரவிந்தம். இதன் 3 நிலைகளை குடும்பத்திலும், உலகிலும், சிருஷ்டியிலும் விளக்குவது இக்கட்டுரை.

குடும்பம் உருவில் சிறியது. கீர்த்தி பெரியது. உலகை இதுவரை உருவாக்கியது குடும்பம். தகப்பனார் அறிவும் தாயார் பண்பும் ஒருவரை வந்தடையச் செய்யுமிடம் குடும்பம். எனக்கும் மனிதர்களுண்டு, என்னை காப்பாற்றுவது குடும்பம். 10 பேரில் மூத்தவனாகப் பிறந்து ஒரு வேலையையும் செய்தறியாத மூத்தபிள்ளை எந்த நேரம் வந்தாலும் எல்லா சௌகரியங்களையும் தரும் என நினைத்துப் பெறுவது குடும்பம். எல்லா மரியாதையையும் எதிர்பார்த்து அவர் பெற்றார். வருமானமே இல்லாத குடும்பத்தலைவனாக ஊர் சுற்றி இறுதி நாள் வரை அலைந்தவரை குடும்பம் மரியாதையும் அன்பையும் பொழிந்து பிளாக் சேர்மன் MLAவாக்கி பெருமைப்படுத்தியது குடும்பம். வாழ்நாள் முழுவதும் மனைவியைப் புறக்கணித்து கடைசி காலத்தில் ஆதரவு தேடிவந்து பெற்று பெருமை பெற்றவர் ஒருவர். Ayala the Angel என்ற கதை அன்பின் அழகுருவமாக உருவானது. Admirality என்ற இலாக்காவில் கிளார்க் ஒருவருக்கு அழகான பையனும் அழகான பெண்ணும் பிறந்தனர். அடுத்த பெண் அழகுடன் பண்பின் சிகரமாகப் பிறந்தது.பெண்ணின் அழகு தானே பிரபலமடைவது. இங்கிலாந்தில் Lord என்றால் அவருக்கும் மக்களுக்கும் தொடர்பிருக்காது. Lord என்பது வருமானத்தை மட்டும் பொருத்ததில்லை. Darcyயின் £10,000 பவுன் வருமானம் அவனுக்கு Lord இன் அந்தஸ்த்தைத் தாராது. வருமானமில்லாத Lordக்கும் அங்கு வருமானமுள்ள மற்றவரைவிட மரியாதையுண்டு. அவருக்கு House of Lord இல் இடம் கடைசிவரையுண்டு. அவர்கள் பிரபுக்கள். குடும்பத்திற்கு வெளியில் திருமணம் செய்வதில்லை. அப்படி ஒரு Lord கண்ணில் இப்பெண் பட்டுவிட்டாள். Lord Chancellor என்பது பெரும் பதவி, எளிய மக்கள் அவரைப் பேட்டியும் காண முடியாது. அப்படியொருவர் மனைவியை இழந்தார். அவருக்கு இந்த அழகியின் குணம் தெரிய வந்தது. ரஷ்ய பிரபுக்கள் பாரிஸ், லண்டன் வருவதுண்டு. ரஷ்யாவிலிருந்து ஒரு ராஜ குமாரன் லண்டன் வந்தவன் பேரழகியின் பெருந்தன்மையை அறிந்தான். பாதிரிமார்கள் சற்று நிதானமானவர்கள். திருமண விஷயத்தில் மற்றவர்க்கு யோசனை கூறுபவர்கள். அவர்களில் ஒருவர் இவளைக் கண்டு நிதானமிழந்து தன்னை மறந்தார். கிருஸ்துவர்கள் Protestant அவர்கள் கத்தோலிக்கராவது, நாம் முஸ்லீம் ஆவது போல். Protestant பாதிரியார் திருமணம் செய்ய அனுமதியுண்டு. கத்தோலிக்க பாதிரியார் கட்டை பிரம்மச்சாரியாக இருக்க வேண்டும். இக்கதையில் Sir Thomas Tringle என்பவரே முக்கிய குடும்பம். அவர் கதையில் Sir பட்டம் பெற்றவர். கதை நடக்கும்பொழுது millionaire லட்சாதிபதியானவர். அவர் லட்சாதிபதியாகி Sir பட்டம் பெறுமுன் இவ்வழகியைக் கண்டு மண்டியிட்டு மணக்கும்படி கேட்டார். அவள் மறுத்ததால் அவள் தங்கையை மணந்தார். ரஷ்ய இளவரசனையும் Lord ஒருவரையும் Lord Chancellor யை ஓர் அழகிய இளம் பெண், சொத்தில்லாத இளம் நங்கை மறுத்தது உலகம் அடிக்கடி கேள்விப்பட்டதில்லை. பாதிரியார் அவள் மறுத்தால் 'சன்னியாசம்' வாங்குவேன் என்றாராம். அதாவது கத்தோலிக்க மதம் சேர்ந்து அங்கு பாதிரியாவேன் என்று சபதம் பூண்டாராம். இத்தனையையும் மறுத்தவள் அழகும்

அன்பும் நிறைந்த கலைஞன் ஒருவனை ஓவியனை பணமில்லாத பொழுதும் அன்பிற்காக மணந்தாள். அவள் எதிர்பார்த்த அன்பும், கலையும், அழகுணர்ச்சியும், அவரை மணந்தபின் அபரிமிதமாக அவர் வாழ்வில் எழுந்து செல்வமாக மாறியது. இரு அழகிய இளம் பெண் குழந்தைகள் பிறந்தனர். பெரும் செல்வம் பிரவாகமாக நடமாடினாலும் செல்வம் வருமுன் செலவாகி அன்புள்ளத்தின் ஆதரவை மட்டும் வீட்டில் இருத்தியது. குழந்தைகள் வளரும் பொழுது அவர்கள் எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்று பேசும் சந்தர்ப்பம் எழ இடமில்லை. அன்பு செயல்படும், செயலில் அன்பு வெளிப்படும், வயதிற்குரிய மரியாதையை குடும்பம் நாடாது. சிறுவர்கட்கும் அவர் வளர்ந்த பின்னும் பெற்றோர் வேலையைச் சேவையாகச் செய்தனர். பிரியம் வெளிப்பட்டது, வீட்டில் அத்தனை பெரிய கலைஞர்களும் கூடினர். பேச்சு பல்கலைக்கழக பிரசங்கமாயிற்று. இளம் வயதில் பெண்கள் அறிய வேண்டிய அத்தனையையும் சொல்லிக் கொடுக்காமல் கற்றுணரும் அன்புச் சூழல் அறிவின் அருவியாக பரவி மலர்ந்தது. 19, 21 வயதில் பெண்கள் 40 அல்லது 50 வயது முதிர்ச்சி பெற்றனர். எதையும் திட்டவட்டமாக செய்யவில்லை. அன்பாக வாழ்ந்தால் அன்பே கலையானதால் அதுவே அறிவு தரும் விவேகமாயிற்று. வளரும் இளைஞர்கட்கு தாம் கல்வியறிவு புகட்டப்படுகிறோம் என்ற நினைவேயில்லை. இலண்டன் மாநகர் சிருஷ்டித்த பண்பின் மலைச்சிகரம் வீட்டில் வலம் வந்ததால் பேச்சே கல்வியாகி செயலே பண்பாக உருவம் பெற்றது. மனம் மகிழ்ந்து மலர்ந்தது. ஓவியம் உச்சகட்ட சிறப்புடையதாக தகப்பனார் எழுதுவதால் அதனுள் உலகம் முழுவதும் அடங்கியதை வீடு அறிந்து அனுபவமாகப் பெற்றது. அவர் குடும்ப சேவையை இறைவனுக்கு வாழ்வின் சேவையாக செய்ததால் செல்வம் தழைத்து மனவளம் பெருகி பண்பைப் புகட்டாமல் பெண்கள் பெற்றனர். தாயார் இறந்தார். தகப்பனார் கலையை மறந்தார். சிறிது காலத்தில் அவரும் இறந்தார். பெரும் செல்வம் கடை பாக்கிக்குப் போயிற்று. தாயுடன் பிறந்த தமக்கையும் தமையனும் இரு பெண்களையும் தங்களிடம் வாழ அழைத்துப் போனார்கள். ஒருவர் பெரும் செல்வந்தர். அடுத்தவர் தகப்பனார் போல் 900 பவுன் ஆண்டு சம்பளம் பெறும் கிளார்க். அதே ஆபீசிலிருப்பவர்.

அயாலாவை பணக்கார வீட்டிலும், லூசியை ஏழை வீட்டிலும் ஏற்றனர். லூசி மூத்தவள். இந்த வீடு அவளால் கற்பனை செய்ய முடியாத கடுமையான ஏழ்மையுடையது. அயாலாவால் இக்கடுமையை அனுபவிக்க முடியாது என லூசி சந்தோஷப்பட்டது எவரும் அறியாதது. தன் வீட்டில் சமையலறைக்கே போயறியாத லூசி கடைத்தெருவுக்கு மாமியுடன் போய் வெண்ணெய் வாங்குவதும் அதை எப்படி ஒரு வாரம் சிக்கனமாக செலவு செய்வது எனத் திட்டமிடுவதும் அவளால் நினைக்க முடியாத காரணங்கள். மாமி தன் சிரமத்தையறியாதவாறு லூசி புது நிலைமையை ஏற்றாள். எப்படி இத்திறமையும் பொறுமையும் அவள் பெற்றாள் என்பது குடும்பத்தின் பெருமையை அறிந்தவரே அறிய முடியும். கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்க முடியாத அடக்கம் சொல்லிக் கொடுத்து வருவதில்லை. பெரும் தண்டனை பெற்றவன் அதிகாரியான பின் தண்டித்தவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து மரியாதை தருவது கற்றுக் கொள்ள முடியாத பண்பு. இலட்சியவாதியான ஆசிரியரின் இலட்சியவாதியான மாணவன் சீர்திருத்த திருமணம் செய்ய முடிவு செய்தான். எவருக்கும் அழைப்பு அனுப்பவதில்லையென முடிவு செய்தான். ஆசிரியர் திருமண விழாவை பரிசீலிக்கும்பொழுது மாணவன் எந்த பரிசீலனையும் தேவையில்லையென்றான். "நான் உங்களை அழைக்கப் போவதில்லை" என்றும் கூறினான். "அழைக்காவிட்டாலும் வருவேன்" என்றார் ஆசிரியர். அரைக்ஷணம் தாமதமில்லாமல் வரும் பதில் கற்று உணர்ந்ததில்லை. பகவான் ஸ்ரீ அரவிந்தர் இதை subliminal knowledge அடி மனம் அறிந்தது என்றார். பிரதமரான பின்னும் மகளுக்குப் பதவி தரும் எண்ணம் எழாமலிருக்க அசோக சக்ரவர்த்தியால் மட்டும் முடியும். பெரும் தொகையை கமிஷன் என்ற பெயரில் முதலாளி தரும்பொழுது அப்பெயரால் வரும் தொகையை ஏற்க முடியாதது பண்பு. மாமாவும் அத்தையும் சுவீகாரமாகத் தரும் சொத்து பெரியதா சிறியதா என்பதைக் கடந்து "என்னால்

பிறர் சொத்தை ஏற்க முடியாது" என்ற மனப்பான்மை உயர்ந்தது. அயாலா லட்சாதிபதியான மாமன் மகனை அவன் உயர்ந்த லட்சியவாதியில்லையென மறுப்பதை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. தன் சம்பளத்தைப் போல் 50 மடங்கு வருமானம் பெற்ற இளம் பெண் அதைத் தானே அனுபவிக்காமல் உரியவர் என ஒருவரை நியமித்து அவருக்குக் கொடுக்க முன் வருவது பெருந்தன்மையைக் கடந்த பெரிய மனம். பரந்த மனம் எதில் எழுந்தாலும் ஏழைக்குப் பெரும் பணத்தில் வராது. பெரும் பணத்தை சிறு தொகையாக்கும் பெரிய தொகை ஏழையை நாடி வராது. அப்படி வந்தபொழுது அதைக் காணிக்கையாக்கும் மனம் உலகில் இது வரையில் பிறக்கவில்லை. இலட்ச ரூபாய் வருமானமுள்ள ஆணோ பெண்ணோ அரை ரூபாய் செலவு செய்ய மனமில்லாத கருமியாய் செயல்படுவதைக் காணலாம். பரந்த மனம் பெரிய மனம் பண விஷயத்தில் காண்பதரிது. எவர் 25,000 ரூபாய் நன்கொடை கொடுத்தாரோ அவருக்கு அடுத்த பத்தாம் நாள் 1000 ரூபாய் பெறுமான பரிசு கொடுக்க முடியாத 'பெரியவர்' ஏன் விலை கொடுத்துப் பரிசைப் பெற்றுக் கொள்ளக்கூடாது என்று கேட்கும் மனம் உடையவர் என்பதை கண்டும் நம்ப முடியவில்லை. பிச்சைக்கார மனம் பெற்றோரிடமிருந்து வருவது. அப்'பெரியவர்' அறியாத வாழ்வின் உண்மை "கொடுக்கும் வாழ்வு சிறியவனிடமிருந்து அனைத்தையும் வலிய எடுத்துக் கொள்ளும்" என்பது. இக்கட்டுரை குடும்பத்தைப் பற்றியது. வாழ்வு அதைக் கடந்த கடல். அதைப் பற்றிப் பேசும் சந்தர்ப்பமில்லை என்றாலும் வாழ்வு "பிரதமரை போய்ப் பார்க்கவும் முடியாதவர்க்கு பெரிய மனத்தின் பரிசாக பிரதம மந்திரி பதவியைத் தர வல்லது". குடும்பம் சிறியதானாலும் வாழ்வின் பெரும் அம்சங்களையும், அதைக் கடந்த பிரம்மத்தையும் பிரம்மாண்டமாகத் தரவல்லது. குடும்பம் கோலாகலமான பிரம்மம். குடும்பத்தை ஏற்றவனை பிரம்மம் நாடி வரும். அனைத்தையும் – உடல், பொருள், ஆவி – தர முடியாதவருடைய காணிக்கை என்றும் காணிக்கையின் புனிதம் பெறாது. மாற்றாம் தாயென பார்ப்பவர் அறிய முடியாத பாசம் தாய்ப்பண்பு. எவரை மணக்க 9 ஆண்டு காத்திருந்தாரோ அவரை மணந்தபின் அவருடன் 9 மாதமும் குடும்பம் செய்ய மனமில்லாதது மனித சுபாவம். மனித சுபாவம் தெய்வ சுபாவமாவது குடும்பம் என்ற அரங்கில் தான் முடியும். ஆண்மை வீரம். அது போரில் வெளிப்படும். ஆன்மீகப் பண்பு தன்னை வெளியிடும் பொழுது "தன் குறையை ஒளிவு மறைவின்றி ஏற்கும் தைரியம் நெஞ்சம் உணரும் வீரம்" என்று விளக்குகிறது. *தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்* என்பது இலக்கியம் இதயத்தின் பண்பாவது. எவரை அணுகிப் பேச முடியாதோ அவரை மணந்து தன் பெருமையை உலகுக்கு எடுத்துரைக்கும் பண்பு 'வனத்தில்' தான் எழ முடியும். ஊரில் எழாது. சோதா பயல்கள் ஊர்த்தலைவராகும் மாநிலம் அவை. Foul mouthவாயில் வராத சொற்களை சரளமாகப் பேசி நான் அனைவருக்கும் advice செய்கிறேன் என்று பறையறிவிப்பவனை கேட்டுப் பொறுத்துக் கொண்டால் பெருந்தன்மை தெரிய முடியாது.

தனித்து வாழ்வது மனித இயல்பு. பிறருடன் இணைந்து வாழ்வது, பிறருக்காக வாழ்வது குடும்பம். பார்வைக்கு எளிதாகத் தோன்றினாலும், சற்று நிதானித்துப் பார்த்தால் இதன் மூலம் வேகமான நம் குணங்கள் இதனால் தணிந்து அடங்குவது தெரியும். ஒரே ஓட்டமாக ஓடும் 4 வயது சிறுவன் 24ம் வயதில் அது போல் ஓட முடியாது. எந்த அளவு வேகம் தணிகிறது என்பது நாகரீகம். வேகம் நிதானமாவது பண்பு. இலையில் பரிமாறியதை எடுத்துச் சாப்பிடும் வேகம் பந்திக்கு சரிவராது. பந்தியில் அனைவரும் ஒன்றாகச் சாப்பிட ஆரம்பிக்க வேண்டும். ஒன்றாக எழுந்திருக்க வேண்டும். பந்தியில் இந்த கட்டுப்பாடற்றவரை அனைவரும் கவனிப்பார்கள். இவை எளிய பழக்கங்கள். கொடுப்பது பெரிய மனம். ஒருவர் கொடுப்பதை பிரியமாக கொடுப்பவர் மனம் இனிக்கும்படி ஏற்பது உயர்வு உன்னதமாவதாகும். குணம் சிறுமையானால் குரல் கட்டையாக, கடுமையாக இருக்கும். குணம் தன்மையானால் குரல் இதமாக, இனிமையாக இருக்கும். பண்பான உயர்ந்த பரம்பரையான குடும்பங்களில் பொதுவாக அநேகர் இனிமையாக சிரித்த முகமாக இருப்பார்கள். மிருதுவான குரலில்

பேசுவார்கள். அமைதி அடக்கமாகும். ஆன்மீகம் இதை சாத்வீகமாக அறியும். தோற்றம் இந்நிலையை களையாகக் காணும். அதிகாரத்தொனி அக்குடும்பத்தில் கேட்காது. இவை சில தன்மையான குணங்கள். ஒரு குடும்பத்தை அறிய அவர் விருந்தோம்பலைக் காணலாம். சத்திய ஜீவிய சித்தியைப் பற்றிப் பேசும்பொழுது இதை அகத்துள் பெற்றவர் ஏராளமானவர்கள். அக வளர்ச்சி பாலவாதமாகவோ, ஜடவாதமாகவோ, உன்மத்த வாதமாகவோ, பிசாசவாதமாகவோ இருக்கும். புறமும் சத்திய ஜீவியப் பக்குவம் பெற்றால் சத்திய ஜீவியம் முழுமை பெறும் என்கிறார். அகம் பெற்றதை புறமும் பெற உதவுவது குடும்பம். அகம் ஜடமானால், குடும்பம் அதை ஜடமாக மட்டும் அறிந்தால் ஜடமே உறுதியாகும். அகம் ஆன்மீக சிறப்புப் பெற்று, புறம் ஜடமானால் குடும்பம் அதைக் கண்டு அக உயர்வை ஏற்க அனைவருக்கும் கட்டுப்பாட்டை அளித்தால் அக சித்தி புறத்தில் மலர உதவும். அயாலா இள வயதில் கற்பனைக் கோட்டையில் தெய்வீக ஆண் மகன் கொலு வீற்றிருப்பதைக் கண்டாள். அவனையே மணாளனாக வரித்தாள். அதை லூசி முதல் எவரிடமும் கூறவில்லை. அவள் குடும்பம் அதை அறியாது. ஆனால் அவள் கற்பனைக்கு தாய் தந்தை சுதந்திரம் கொடுத்தனர். சித்தி மாமா வீட்டில் அவளுக்கு அந்த சுதந்திரமில்லை. வரன் வசதியுடையவனானால் பெண் அவனை ஏற்க வேண்டும் என அவளைத் தொந்தரவு செய்தனர். அந்த சுதந்திரம் ஆன்மீக சுதந்திரம். வீட்டிலுள்ள அனைவருக்கும் அந்த ஆன்மீக சுதந்திரம் வழங்குவதே நல்ல குடும்பம். குடும்பத் தலைவர் அது போல் ஓர் குடும்பத்தை நடத்துவது குடும்பச் சேவை. வீட்டில் அனைவரும் வேறொரு வீட்டிற்குப் புறப்பட்டால் ஒருவர் வர முடியாது எனக் கூற முடியாது. கூறினால் அனுமதிக்கமாட்டார்கள். அது குடும்பக் கட்டுப்பாடாகும். பொதுவாக எல்லாக் குடும்பங்களும் ஒருவர் மாறி செயல்பட அனுமதிக்க மாட்டார்கள். பிள்ளைகள் ஹாஸ்டலில் பலவகையான பிள்ளைகளுடன் கலந்து பழகுவது மனமும் பழக்கமும் வளர உதவும். ஹாஸ்டல் பெரிய குடும்பம். ஆபீஸூம் அது போலவே. ஊரும் உலகமும் குடும்பமாவது நாகரீகம் ஆன்மீக உயர்வு பெறுவதாகும். பொதுச் சேவை என்பது தொழிலிலும், அரசியலிலும் காண்பது. இவை இரண்டையும் கடந்து ஊர் விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதிலும் பொதுச் சேவையுண்டு. குடும்பம் கட்டுப்படும். ஏனெனில் குடும்பத்தில் அனைவரும் நம்மை அறிவர். பொது வாழ்வில் நாம் அனைவரையும் அறிந்து அவர்களை ஒழுங்குபடுத்த நமக்கு மனவளம் தேவை. மனவளம் என்பது அறிவுக்குப் புலப்படுவதை உணர்வு ஏற்கும் பொறுமையாகும். இது ஒருகட்ட உயர்வானாலும் எளிதல்ல. ஏராளமான விருந்தனர் வரும் குடும்பம் ஒரு சிறு அளவில் பொது வாழ்வின் சின்னமாகும். 10 பேருள்ள குடும்பத்தில் பழகி பேர் வாங்குவதை விட 70 பேரிடமும் அதே பெயர் வாங்குவது மனவளம் பெறுவது. அறிவு கூர்மையானது. உணர்ச்சி பூரணமானது. கூர்மையான அறிவு பூரணம் பெற உணர்வால் உறுதியடைய வேண்டும், வந்த விருந்தினர் காபி டம்பளரைக் கீழே போட்டு துணியெல்லாம் கறையாக்கினால், அவருக்கு மாற்று உடை கொடுத்து வேறு காபி தந்து, சிந்தியதை உடனே துடைத்தெடுப்பது முறை. இது எளிய முதற்கட்டம். பொதுவாக அனைவரும் தேறுவதில்லை. தேறாதவர் நாகரீக உலகில் தேறாதவர்.

அனைவரும் இத்தவறு வராமல் பார்த்துக் கொள்வார்கள். ஒரு வீட்டிற்குப் போய் 15 நிமிஷம் இருந்து நல்ல பெயருடன் வெளிவருவது நல்ல பழக்கங்கள் உள்ளவராலேயே முடியும். இருக்கிறது என்பதை சிலர் 'கீது' என்பர். அது மொழி வளம் பெறாத ஊர் பாஷை. அதைக் கேட்டவுடன் அனைவரும் கொல் எனச் சிரிப்பது நாகரீகமாகாது. சிரிக்காமலிருக்க முடியாது. அப்படியொருவர் பேசியபின் எவரும் அதைக் கவனிக்கவில்லையென அவர் உணரும்படி வீட்டினர் நடந்து கொள்வது நாகரீகம். ஒரு ஸ்தாபனத்தில் ஒருவர் சம்பளத்தை உயர்த்த முடியாது. உயர்த்துவதானால் அனைவர் சம்பளத்தையும் — scale — உயர்த்த வேண்டும். குடும்பத்தில் ஒரு நல்ல பழக்கம் பெறுவது தனிப்பட்ட உயர்வு. பொது வாழ்வில் உள்ள பொழுது பொது வாழ்விற்குரியது போல் ஒரு நல்ல பழக்கம் பெறுவது scaleயை உயர்த்துவதாகும். பொது வாழ்வு பொதுவாக நம் நேரத்தை அதிகமாகச் செலவு செய்யும். வீட்டில் ஒரு

சட்டம் போட அதிக நேரமாகாது. பொது வாழ்வில் அதே சட்டம் போட பல நாட்களாகும், பல வகை மனிதர்களைச் சந்தித்துப் பேச வேண்டும். முடிந்த பின்னும் வேலை ஓரளவே முடிந்திருக்கும், முழுவதும் முடிக்க முயன்றால் "பொது வாழ்வு குடும்பமில்லை, அவசரப்படக் கூடாது" எனப் பதில் வரும். ஆன்மீக தத்துவப்படி குடும்பம் பிரம்மமாவது பெரியது. பொது வாழ்வு அதே போல் பிரம்மமாக பிரபஞ்சமே மாற வேண்டும். அதற்கு ஆத்மா மகாத்மாவாக வேண்டும். அதையும் கடந்த நிலையை எட்ட மனிதன் பரமாத்மாவாக வேண்டும். அவை பூரண யோக சித்தியின் கட்டங்கள். சேவை உலகுக்குரியது. யோகம் போல் பெரியதல்ல. என்றாலும் சேவை சிறப்புற யோக அம்சம் அடிப்படையில் தேவை. பிங்லி மெரிட்டனுக்குரியவரில்லை, மெரிட்டனுக்கு வந்தார், தங்கினார். அனைவரிடமும் பழகினார், ஜேனை விரும்பினார். இது மெரிட்டனில் வாழ்பவருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். உயர்ந்த கோணத்தில் பார்த்தால் பிங்லிக்கும் பெரிய சந்தர்ப்பம். இவை பிரெஞ்சுப் புரட்சியின் உபரிகளாக வருகின்றன. குடும்பம் உயரும் வழி. குடும்பம் பொது வாழ்வின் உயர்வுகளை ஏற்றால் இப்பலன் பலிக்கும். பென்னட் குடும்பத்தாருக்கும், பிங்லி குடும்பத்தாருக்கும் இப்பதமில்லை. வந்த வாய்ப்பு போய்விட்டது. லிடியா அமர்க்களம் செய்து விட்டாள். விக்காம் துரோகம் செய்து விட்டான். இதுவரையில்லாத பொறுமையையும், பொறுப்பையும் மேற்கொள்ள பென்னட் முன் வருகிறார். ஆபத்து விலகுகிறது. வாய்ப்பு பலிக்கிறது. மிகப் பெரிய வாய்ப்பும் வந்து மெரிட்டன் வாழ்வையே அபரிமிதமாக உயர்த்துகிறது. குடும்ப வாழ்வுக்கும் குடும்ப சேவைக்கும் பொது வாழ்வின் சேவைக்கும் உள்ள வித்தியாசமிது. குடும்பச் சேவையின்று பொதுச் சேவைக்கு நகர்ந்தால் பொறுமை போய் விடும். தெம்பு போதாது 10 பேர் முயன்றால் முதற்கட்டத்திலேயே 9 பேர் விலகி விடுவார்கள். பொதுச் சேவையை ஏற்க தியாகம் வேண்டும், அநேகமாக அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டி வரும். நேரமிருக்காது. பல நாள் தொடர்ந்து வீட்டிற்கு வர முடியாது. வீட்டையே இழந்து விட்டதாகத் தோன்றும். சில சமயங்களில் வீட்டுப் பொருளை பொதுத் தேவைக்குத் தர வேண்டி வரும். இவை கடினமான கட்டங்கள். ஒரு முறை ஏற்றால் அடிக்கடி செய்ய வேண்டி வரும். நம்மை விடத் தாழ்ந்த குடும்பங்களில் சம்பந்தம் செய்து விட்டால் குடும்ப வாழ்வு பொதுச் சேவையாகிவிட்டது போலாகும். பொது வாழ்வு நாமறிவது. பொதுச் சேவை சிலரால் மட்டும் செய்யக் கூடியது. பொதுச் சேவை செய்ய எளிய மனிதனின் அறியாமை ஏற்றுப் போற்றும் வகையில் நடப்பது அவசியம். குடும்பம் உள்ளதை ஏற்கும். பொது வாழ்வு இல்லாததைக் கேட்கும். பெற்றுக் கொடுத்தால் தொடர்ந்தும் கேட்கும், வெட்கமறியாது. எவரும் சம்பந்திகள் வீட்டில் போய் நெடுநாள் தங்க மாட்டார்கள். தாழ்ந்த குடும்பத்தில் பெண் கொடுத்து விட்ட ஒருவர் மாப்பிள்ளை மாமியார் வீட்டில் வந்து 1 வருஷம் தங்கி போகும் பொழுது சொல்லாமல் போய் விட்டார். இது பொது வாழ்வு பொதுச் சேவையாவது.

இறைசேவை என்பது பிரம்மாண்டமானது. பட்டினத்தார் வீட்டைத் திறந்து விடச் சொன்னார். ஊரார் புகுந்து கொள்ளையடித்தனர். இறைவனுக்கு ஒருவர் சேவை செய்ய ஆரம்பித்தால் சிபிச்சக்ரவர்த்தி போல ஊனை வெட்டித்தர வேண்டும். மகாத்மா நாட்டை சுற்றி வரும் பொழுது மக்கள் அவர் காலை தொட்டு வணங்க ஆசைப்படுவார்கள். மக்கள் எளியவர்கள். பலர் நகத்தை வெட்டியிருக்க மாட்டார்கள். மகாத்மா காலைத் தொட்டால் நகம் கீறிப் புண்ணாகும். எட்ட இருந்து வணங்கக் கூடாதா எனக் கேட்டால் மகாத்மா "மக்கள் காலைத் தொடுவதைத் தடுக்க முடியாது. கால் புண்ணாவதைத் தடுக்க முடியாது. அது என் கர்மம்" என்றார். மனிதனுக்கு consciousness ஜீவியம் உயராமல் பொதுச் சேவையில் இறங்க முடியாது. அப்படி இறங்கினால் மக்களைச் சந்திக்கும் பொழுது அவர்களுடைய consciousness-னுடன் தலைவர் consciousness சேரும். தலை சுற்றும். மயக்கம் வரும். இவை தவிர்க்க முடியாதவை. இவை பொதுச் சேவையின் அம்சங்கள். ஆன்மீக சேவையாக இல்லாவிட்டாலும் சமூக சேவையானாலும் பொதுச் சேவை, இறைச் சேவை எளிய மனிதனுக்கு முடியாது. Hazare ஏரியைக் கட்டியது பெரும் சேவை. லஞ்ச ஒழிப்பில் இறங்கியது அதனினும் பெரியது. அதற்காக ஒரு கட்சி

ஏற்படுத்தி தேர்தலில் நிற்க முயன்றால் சிறு இடங்களில் பெரு வெற்றியும், பொது இடங்களில் தோல்வியும் எழுகின்றன. ஒரு எளிய சிப்பாய் இச்சேவையை மேற்கொண்டது பொது வாழ்வு தரும் உன்னத வாய்ப்பு. வேலை சேவையாகி குடும்பம், பொது வாழ்வு, இறைசேவையாவது ஒரு வகையில் *The Life Divine Outline* போன்றது. குடும்பத்திற்கு சேவை செய்ய தன்னலம் பிறர் நலமாக வேண்டும். பொது சேவையாக பொது மக்கள் அறியாமையை நாம் அறிவாகக் கருதி செயல்பட வேண்டும். இறைசேவையாக அழிச்சாட்டத்தை அற்புதமான இலட்சியமாகக் கொள்ளவேண்டும். ஷெர்லக்ஹோமஸ் ஒரு சேவை செய்தார். Dr. தார்ன் செய்தது வேறு வகையில் பெரிய சேவை. பென்னட்டும், டார்சியும் செய்தவை மனத்தாலும், பெரிய மனத்தின் போக்கை பெரும் பணத்தாலும் சேவையாக மாற்ற வேண்டும். சேவை திறமை மிக்கவனுக்கே உண்டு. ஸ்டேட் பாங்கின் ஒரு பகுதியின் சேர்மனின் திறமையை ரிஸர்வ் பேங்க் சேர்மன் பாராட்டி அவரை அழைத்து அகில இந்திய பேங்க் சிரமத்திலிருப்பதால் அதன் சேர்மன் பதவியை ஏற்று அதை சரி செய்ய வேண்டும் எனக் கேட்டார். அவர் வேண்டுகோளை ஏற்று புதுப்பதவியை ஏற்று அந்த பேங்க் நஷ்டத்தை லாபமாக மாற்றினார் ஒருவர். அந்த பாங்கில் பழம்பெரும் பெருச்சாளிகள் கொள்ளையடித்தது நின்றது. சேவை திறமையால் செய்யப்படுவது, திறமைக்குரிய முதல் அம்சம் தற்காப்புக்குரிய பாதுகாப்பு. சர்க்கார் ஊழியர் திறமை நாட்டில் பழம் பெருச்சாளிகளிடம் செல்லாது. அவர்களுக்கு உலகம் ஏற்பட்டதிலிருந்து உள்ள நிலைமை தெரியும். சாதிப்பதை விட ஏமாற்றத் தெரியும். சேவை செய்த வெற்றி பெற்றவரை திருட்டுப்பட்டம் கட்டி கைது செய்தார்கள். கோர்ட்டில் ஊழியர் உண்மையை சொன்ன பொழுது ரிஸர்வ் பேங்க் கவர்னர் தனக்கு எதுவுமே தெரியாது, தான் யாரையும் எதுவும் கேட்கவில்லை என பத்திரிகைகளில் அறிக்கை விட்டு கை விரித்து விட்டார். பொது சேவை நெருப்பாற்றில் எதிர் நீச்சு நீந்துவது எனத் தலைவர்கள் கூறுவார்கள். அன்னையை ஏதோ ஒரு சமயம் ஏதோ ஓரளவில் அறியும் வாய்ப்பு எழுந்தாலும் பிற்காலத்தில் எழும் பெரிய ஆபத்துகளிலிருந்து இப்பொழுதே மீட்டு விடுவார். 100க்கு 100 பேர் அது போன்று வரும் அருளை “எனக்கு அதெல்லாம் தேவையில்லை” எனக் கூறி மறுத்து விடுவார்கள். இந்த ஊழியர் அது போல் அருளை மறுத்தவர். இறை சேவை அதனினும் பெரியது.

^^^^^^^^^^

மூலம் : ஸ்ரீ கர்மயோகி

சொற்பொழிவாற்றியவர் : திரு. நாகராஜன், ராணிப்பேட்டை

சொற்பொழிவாற்றிய தேதி : 20.03.16